★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆடி 27உ சனி (11—8—56) ★ ★ வெளியீடு : ஆடி 28உ ஞாயிறு (12—8—56) [இதழ் 53

'கன்னியாகுமரி மாவட்டம்!'

புதுடில்லி ஆக. 10—

திரு-கொச்சியில் உள்ள தமிழ் தாலுகாக்கள் நான்கும் தமிழ் நாட்டுடன் சேர்ந்த பிறகு, அவை நான்கும் 'கன்னியா குமரி மாவட்டம்' என்று அழைக்கப்படும்.

இதற்கான திருத்தம் ஒன்றை மாநில புது அமைப்பு மசோதாவின்போது பண்டித பந்த் கொண்டுவந்து நிறை வேற்றிக் கொண்டார்.

'கன்னியாகுமரி மாவட்ட'த்தில், அகத்தீசுவரம், தோவாளை, விளவன்கோடு, கல்குளம் ஆகிய நான்கு தாலுகாக்கள் இடம் பெறும்.

'வேண்டுமென்றே தடையை மீறவில்லை'

'கலக உணர்ச்சியோடு நடந்து கொள்ளவில்லை'

'குருதி கொட்டுவோம் என முழங்கவில்லை'

தம்மம்பட்டி வழக்கில் மாஜிஸ்திரேட் தீர்ப்பு

"ஏற்கனவே தெளிவாக அறிவிக்கப்பட்டிருந்த தடை உத்தரவை மீறும் நினைப்புடன் சட்டவிரோதமாகக் கூடி இருந்தார்களா?

"முதல் குற்றவாளியிலிருந்து நான்காவது குற்றவாளிவரை கலைந்து போகும்படி சொன்ன பிறகும் கலைந்து செல்லாது சட்ட விரோதமானக் கூட்டத்தில் இருந்தார்களா?—ஆக, இரண்டு பொருள்பற்றித்தான் ஆராய வேண்டியதாகிறது,

"சென்னை போலீஸ் சட்டத்தின் 30-வது பிரிவின்கீழ் நாமக்கல் டிப்டி-சூப்பரிண்டெண்டால் பிறப்பிக்கப்பட்டிருந்த தடை உத்தரவை, தம்மம்பட்டியில் தண்டோரா மூலம் விளக்க மாக அறிவிக்கப்பட்டிருந்தது என்பது போலீஸ் சார்பில் சாட்சியம் கூறிய முதல்—எட்டாவது சாட்சிகள்மூலம் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. நாம், அதை நம்பாமல் இருப்பதற்குக் காரணம் எதுவுமில்லை. மேலும், எட்டாவது சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்யவுமில்லை. 'முன் அனுமதி பெறுமல் கூட்டமோ, ஊர்வலமோ நடத்தக்கூடாது' எனப் போடப்பட்டிருந்தத் தடை உத்தரவு, கிராமத்தில் விரிவாக விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது என்பது இதனுல் தெளிவாகத் தெரியவருகிறது.

"20—2—56-ல் கூட்டம் நடத்துவதற்கும் ஊர்வலம் செய்வதற்கும் தம்மம்பட்டியைச் சேர்ந்த சத்தியநாராயண என்பவருக்கு அளிக்கப்பட்டிருந்த அனுமதிச் சீட்டை, பதின்மூன்ருவது சான்ருக போலீஸ் சார்பு பத்தாவது சாட்சி இங்கு கொடுத்துள்ளது. உத்தேசிக்கப்பட்ட முதல்—ஐந்தாவது குற்றவாளிகள், தங்கள் தலைவர்கள் மூலம் அனுமதி பெற்றிருப்பதாகக் கூறி உள்ளார்கள். அவ்வனுமதியை வைத்திருந்த சத்தியநாராயண, அந்த அனுமதியுடன் காலை ஒன்பது மணியிலிருந்து சிறை அறைக்குள் மூடப்பட்டு இருந்திருக்கிருர். இவ்வகையில், பெற்றிருந்த அனுமதியைப் பயன்படுத்த முடியாமல் அவர் (சத்தியநாராயண) தடுக்கப்பட்டு இருக்கிருர்.

"சத்தியநாராயண மூலம் அனுமதி கோரப்பட்டு பெறப்பட்டு இருந்தும், சத்தியநாராயண, பெறப்பட்ட அனுமதியுடன்

(4-ம் பக்கம் பார்க்க)

மாநில மசோதா நிறைவேறிற்று!

உறுப்பினர்களிடை மகிழ்ச்சியில்லை

புதுடில்லி, ஆக. 10—

மொழிவழி மாநிலங்கள், இரு மொழி மாநிலங்கள், மத்திய ஆட்சிப் பகுதிகள், எண்ணற்ற எல்லைத் தகராறுகள், இவற்றை எல்லாம் அடக்கிக் கொண்டிருக்கிற ஒரு கதம்பமாக உள்ள மாநில புது அமைப்பு மசோதா மக்கள் சபையில் இன்று நிறை வேற்றப்பட்டுவிட்டதாம்.

இதுபோன்று, இந்தியாவின் மாநில எல்லைகளைத் திருத்தி அமைக்கிற முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மசோதா மக்கள் சபையில் நிறைவேற்றப்படும் போது, இயற்கையாக எழக் கூடிய ஆர்வம்—மகிழ்ச்சி எதும் உறுப்பினர்களிடத்தில் காணப் படாதது, 'ஒவ்வொரு பிராந்தியத்தாரிடையேயும் மசோதா குறித்து ஆழ்ந்த அதிருப்தி நிலவுகிறது' என்பதைக் காட்டுவதாகவே அமைந்திருக்கிறது.

இனி மசோதா, மாநிலங்கள் சபையிலும் நிறைவேற்றப்பட்ட பின், குடியரசுத் தலைவரின் சம்மதம் பெற்று சட்டமாக வேண்டும்.

'கூழுக்கு உப்பில்லை' என்றுல்!

'பாலுக்கு சர்க்கரை தருகிறேன்' என்கிருர் மந்திரி!

சென்னை, ஆக. 10—

கெஜட் பதிவில்லாத சர்க்கார் ஊழியர்கள் நீலகிரி, குற்றாலம் போன்ற சுகவாச ஸ்தலங்களுக்குச் சென்று ஓய்வு எடுத்துக்கொள்ள உதவ சர்க்கார் உத்தேசித்திருப்பதாக சட்டசபையில் நிதிமந்திரி கூறினுராம்.

7,000 டன் பர்மா அரிசி

சென்னை வந்து சேர்ந்தது

சென்னை, ஆக. 11—

பர்மாவிலிருந்து 7,000 டன் அரிசியை ஏற்றிக்கொண்டு கப்பல் ஒன்று சென்னைத் துறைமுகம் வந்துள்ளது.

இதில், 1,000 டன் நேரிடையாகக் கோழிக்கோட்டிற்கு அனுப்பப்பட்டு நியாய விலைக்கு விற்கப்படுமாம்.

இதரவை, வேறு இடங்களுக்கு அனுப்பிவைக்கப்படுமாம்.

இன்னும் தேவையானபோது பர்மாவிலிருந்து அரிசி கிடைக்கும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

அகமதாபாத்தில் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்கள்

மூன்ரும் நாளும் துப்பாக்கிப் பிரயோகம்

கிளர்ச்சி பரவுவதாகத் தகவல்

அகமதாபாத், ஆக. 10—

மூன்ருவது நாளாக அகமதாபாத் நகரில் பெரும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. மேலும், இராணுவமும் விசேஷ போலீசாரும் நிலைமைகளைச் சமாளிப்பதற்காக வரவழைக்கப்பட்டிருக்கின்றனர்.

மூன்ருவது நாளான இன்றும் போலீசாரின் துப்பாக்கிகள் குண்டுகளைப் பொழிந்திருக்கின்றன; 12 வயதுப் பையன் உட்பட இருவர் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்திற்குப் பலியாகியிருக்கின்றனர். கடந்த மூன்று நாட்களில் அகமதாபாத்தில் மட்டும் 14 பேர் பலியாகியிருக்கின்றனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கள் தாக்குதலுக்கு, பெரும் காங்கிரஸ் தலைவர்களின் இல்லங்கள், போலீஸ் நிலையங்கள், சர்க்கார் அலுவலகங்கள் இவற்றையே இலக்காக்கியிருக்கின்றனர்.

மேலும் 24 மணி நேரத்திற்கு நகர நீதிபதி ஊரடங்குச் சட்டம் அமுல் செய்திருக்கிருர்.

இந்தக் கிளர்ச்சிகளில் பெரும் பகுதியினை மாணவர்கள் முன்னின்று நடத்தியிருக்கின்றனர்.

இதற்கிடையில், பரோடாவிற்கும் இரு மொழி பம்பாய் மாநில அமைப்பு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் பரவியிருக்கின்றன.

அங்கும் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டிருக்கிறது; அங்கும் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியிருக்கின்றனர்; இதனுல் அங்கும் இருவர் பலி கொள்ளப்பட்டனராம்.

அகமதாபாத்தில் இன்றைய ஆர்ப்பாட்டங்களின்போது காந்தி ஆஸ்ரமமும் தாக்கப்பட்டதாக செய்திகள் கூறுகின்றன.

அமைதி நிலவுவதற்கு வழி என்ன என்பதை அதிகாரிகள் சிந்தித்துக் கொண்டிருக்கின்றனராம்.

போலீஸ் படைகள், குஜராத்தின் இதர பகுதிகளிலிருந்து வரவழைக்கப்பட்டிருக்கின்றன.

மக்கள் சபையில் பண்டித பந்த், நிலைகளுக்காக வருத்தம் தெரிவித்திருக்கிருர்.

பம்பாயில் மொரார்ஜி தேசாய் அகமதாபாத் ஆர்ப்பாட்டங்களைக் கண்டித்திருக்கிருர்.

(4-ம் பக்கம் பார்க்க)

5-போலீசார் கொலைக்கு!

23-ஆப்பிரிக்கர்கள் தூக்கிலிடப்படுகின்றனர்

பீட்டர் மாரீட்ஸ்பர்க், ஆக. 10—

5 போலீசார் கொல்லப்பட்டதற்காக 23 ஆப்பிரிக்கர்கள் தூக்கி லிடப்படுகின்றனர்.

இரகசியமாகப் புகையிலை சாகுபடி செய்யப்படுகிறதா என்பதைச் சோதனையிடச் சென்ற 2 ஐரோப்பிய போலீஸ் சார்ஜெண்டுகள், மற்றும் மூன்று ஆப்பிரிக்கப் போலீசார் இவர்களை ஆத்திரம் கொண்ட மக்கள்கூட்டம் தாக்கிக்கொன்று விட்டதாம்.

இதற்காக 26 ஆப்பிரிக்கர்மீது கொலைக் குற்றம் தாக்கலாகி 3 பேர் விடுதலை செய்யப்பட்டனர் என்றும், 23 பேர் மரண தண்டனை விதிக்கப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது.

வரலாறு காணுத ஆர்ப்பாட்டம்

10,000 ஆப்பிரிக்கப் பெண்கள் திரண்டெழுந்த காட்சி

வரலாற்றுக் குறிப்பெடுத்து செல்லும் ஏற்பாட்டிற்கு எதிர் நடவடிக்கை

பிரிட்டோரியா, ஆக. 9—

'எல்லா ஆப்பிரிக்கப் பெண்களும் தமது வரலாறு பற்றிய குறிப்புப் புத்தகங்கள் வைத்திருக்கவேண்டும்' என்றும், 'அவர்கள் எங்கு சென்ருலும், அந்தப் புத்தகத்தைத் தூக்கிச் செல்ல வேண்டும்' என்றும் தென்னுப்பிரிக்க சர்க்கார் பிறப்பித்துள்ள உத்தரவை ஆட்சேபித்து சுமார் 10,000 பெண்கள் இன்று சர்க்கார் அலுவலகத்தின் முன்கூடி ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

இதுவரையில் தென்னுப்பிரிக்காவில் பெண்கள் இவ்வளவு பெரிய ஆர்ப்பாட்டம் நடத்தியதில்லை என்றும் கூறப்படுகிறது.

இப்போது, '16 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு ஆண் மகனும் தன்னைப் பற்றிய குறிப்புப் புத்தகத்தை எடுத்துச் செல்லவேண்டும்' என்பது தான் சட்டமாக இருந்துவருகிறது; போலீசார் கேட்டால் குறிப்புப் புத்தகத்தைக் காட்ட வேண்டும்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் பிரதமர் ஸ்ட்ரீடைச் சந்தித்து மனு ஒன்று தர விரும்பினர்; அவர் இல்லாததால் அவரது செயலாளரிடம் மனுவைத் தந்துள்ளனராம்.

அந்த மனுவில் காணப்படுவதாவது:—

"இலட்சக்கணக்கான பெண்கள் சார்பில், நாங்கள் ஆர்ப்பாட்டம் செய்கிறேம்; கையில் தமது வரலாற்றுப் புத்தகத்தைக் கொண்டு போக வேண்டிய அவமானத்திலிருந்து ஆப்பிரிக்கப் பெண்களைக் காப்பாற்றுவதற்காகவே இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்துகிறேம். நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக ஆப்பிரிக்க மக்கள் மிகவும் கொடிய சட்டங்களுக்கு உள்ளாகிக் கஷ்டப்பட்டு வந்திருக்கிருர்கள்: ஆப்பிரிக்க ஆண்களும ஏற்கனவே இந்த கொடிய ஏற்பாட்டின் விளைவாகத் தொல்லைகளை அனுபவித்து வருகிருர்கள். பெண்களுக்கும் இந்தச் சட்டம் விதிக்கப்பட்டால் குடும்பங்கள் அழிந்துபடும்; ஆப்பிரிக்கப் பெண்கள் தங்கள் பிள்ளைகளைப் பிரிய நேரிடும்; ஆகவே, இந்தச் சட்டத்தைத் தகர்த்தெறியும் வரை ஆப்பிரிக்கப் பெண்கள் அமைதியாக இருக்கமாட்டார்கள்."

காசர்கோடு வட்டம் கேரளத்திற்கு மாற்றப்படுவதற்கு எதிர்ப்பு

தென் கன்னட மாவட்டத்தில் காசர்கோடு வட்டத்தில் காசர்கோடு தாலுகா முழுவதையும் கேரள மாநிலத்தில் சேர்ப்பதை ஆட்சேபித்து, தென் கன்னடத்திலிருந்து மக்கள் சபைக்குச் சென்றுள்ள உறுப்பினரான சிவராவ், காங்கிரஸ் பார்லிமெண்டரி கட்சியிலிருந்து இராஜிநாமாச் செய்துள்ளார் என்று தெரியவருகிறது. அவர் இப்போது எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கிருராம்.

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

சென்னை 11—8—'56 சனி

விசுவாமித்திர-தூர்வாசீயம்

12 நபர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்!
200 நபர்கள் படுகாயப்படுத்தப்பட்டனர்!

★

நெசவாலை நகராக இருக்கின்ற அகமதாபாத் நகரில், ஆளவந்தார்கள், இத்தகு வெறிச் செயலில் ஈடுபட்டு இருக்கின்றனர்.

யார் இந்த ஆளவந்தார்கள்? ஏகாதிபத்திய எடுபிடிகளா? பிரிட்டிஷ் அதிகாரவர்க்கத்தின் அடிவருடிகளா? ஆங்கிலத் துரைமார்களிடம் அடக்குமுறை பயிற்சிபெற்று ஆட்சிப் பீடத்திலமர்ந்திருப்பவர்களா?

அத்தகு 'இழிகுணம்' பெற்றிருப்பவர்கள்கூட அஞ்சுவர்—நெஞ்சம் பதறுவர்— இத்தகையக் கொலைத் தொழிலை விருப்புடன் வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு!

ஏகாதிபத்திய எடுபிடிகளின் பரம்பரையில்வந்த 'பதவிப்பித்தர்கள்'கூட, நெஞ்சாலும் நினைக்கத் துணியாத இந்த உயிர்போக்கும் பாதகத்தைச் செய்யத் துணிந்தவர்கள் பின் யார்தான்?

'அகிம்சா பரமோதர்மம்' என்ற 'பாரதப் பண்பாட்'டில் பன்னெடுங்காலமாக ஊறிவந்திருப்பதாகச் சொல்லிக்கொள்ளுகிறார்களே, அந்தப் பூர்வப் பெருமை பேசிகள்—அவர்கள்தான், நாட்டின் ஆளவந்தார்கள் என்ற அந்தஸ்திலிருந்து கொண்டு, இந்தக் கேட்பதற்கே உடல் சிலிர்க்கும் உயிர்குடிக்கும் கொலை விளையாட்டை உளம் உவந்து புரிந்திருக்கிறார்கள்!

'ஆத்ம ஞானத்தின்' இக்கால வாரிசுகள் எனப் பீத்திக்கொண்டும், உலகிலுள்ள மற்ற அரசுகள் அனைத்தும் 'இழி'வான உலகாயுதத்தில் உழன்று தவிக்கின்றன என முதலைக்கண்ணீர் நாள் தவறாமல் பெருக்கியும் வருகிறார்களே, அதே ஆத்மத் துறவிகள்தான், வேறு போக்கற்ற நிலையில் தங்கள் குடிமக்களாகக் கிடக்கும் அகமதாபாத் மக்களை, ஆட்சிப் பொறுப்பில் இருந்து கொண்டு நரவேட்டை ஆடி இருக்கிறார்கள்!

12 நபர்கள் கொல்லப்பட்டனர்! 200 குடிமக்கள் குற்றுயிரும் கொலையுயிருமாக ஆக்கப்பட்டுள்ளனர்!

'காந்திய அகிம்சா அறநிலைப் பள்ளியில் பல்லாண்டு காலம் பயிற்சி பெற்றுத் தேறியுள்ளோம்; அத்தூய நெறி கற்றோர் தங்களிலும் சிறு அளவாவது தெரிந்திருப்போர் எவர் உளர்?—அப்புனித நெறியைச் செயலாற்றுந் திறம் தங்களுக்கு மட்டுமே கைவல்யமாகி இருக்கிறது'—என்றெல்லாம் தினம் தினம் எழுதியும், கேட்பவர் காது செவிடுபடும்படி பறையறைவித்தும் வருகிறார்களே காங்கிரஸ் கட்சியினர், அந்தத் திருக்கல்யாணகுணம் பெற்றிருப்பவர்கள்தான், அதிகார பீடத்தில் ஏறிக்கொண்டு, ஆமதாபாத் மக்களை—'மகா குசராத் தேவை' எனக் கோரிய ஆயிரமாயிரமான குடிமக்களை, போலீஸ் படையை ஏவிப் பல முறை சுட்டுத் தள்ளி உள்ளனர்.

'ஒளி ஞாயிற்றின் மறைவே தனது பெரும் நிலப்பரப்பில் நிகழ்வது கிடையாது—ஏழு கடலிலும் தன்னிகரற்று நீந்திச் செல்லும் பெரும் கடற்படையைத் துணையாகக் கொண்டு இயங்குவது — அதற்கொப்பப் பல்வேறுவகைப் படைபலமும் கொண்டு விளங்குவது—உலகமாந்தர்க்கெல்லாம் அரசியல் அறிவை அள்ளி அள்ளி வழங்கி வருவது — என்றெல்லாம் பெருமை பேசி ஏகாதிபத்தியத் திமிர் படைத்து, மிருக பலத்தையே நம்பிக் கோலோச்சிய பிரிட்டிஷ் 'கொடுங்கோலாட்சி'யைக் 'கத்தியின்றி இரத்தமின்றி' ஆத்மப் போர் தொடுத்துப் பாரதத் தாயின் அடிமை விலங்கை உடைத்தெறிந்து, சுயராஜ்யம் அமைத்து விடுவோம்' எனப் பீத்தித் திரிந்து வருகிறார்களே அசகாய சூரர்கள்—அந்த 'அகிம்சா வீரர்'களான காங்கிரஸ் ஆளவந்தார்கள்தான், தகுதியற்ற தங்களை ஆளவந்தார்களாக ஆக்கிவிட்ட பாவத்திற்காக, அகமதாபாத் மக்களைக் காட்டுமிருகங்களை வேட்டையாடுவதுபோல் ஆடியுள்ளனர்!

12 நபர்கள் கொல்லப்பட்டனர்! 200 தோழர்களின் உயிர் ஊசலாடிக் கொண்டு இருக்கிறது!

'அசோக வட்டம்' பொறித்தக் கொடிகள், உலக நாடுகளின் தலை நகரங்கள் அனைத்திலும் விண்முட்டக் கம்பீரமாகப் பறந்து கொண்டு இருக்கின்றன!

'அசோக வட்ட'த்தின் தூய அறவழிபற்றி, அந்த நகரங்களில் உள்ள இந்தியத் தூணைக் கண்ட அதிகாரிகள் அடிக்கடி போதித்தும் வருகின்றனர்.

ஆனால், தங்கள் கருத்துக்கு மாறாக கூறுபவரை—தங்கள் முடிவிற்குக் கண்டனம் சொல்பவர்களை—தங்கள் உள்ளத்தை ஒளிவு மறைவு இல்லாமல் திறந்து பேசுபவர்களை, பாரதப் பண்பாட்டின் 'வழிவந்தவர்கள்', காந்திய கொல்லா அரசியல் நெறி 'பயின்றவர்கள்', அசோகச் சக்கரம் பொறித்த 'கொடி ஏந்திகள்', புத்தர் விழா எடுக்கும் 'புனிதவான்கள்', வல்லரசுகளுக்குப் 'பஞ்சசீலம்' போதிக்கும் 'பெருந்தகைகள்', 'எதிர்ப்பா—ஒழிந்து போ; மறுப்பா—மாண்டுபோ; கண்டனமா — தொலைந்து போ;' என்று புராண கால விசுவாமித்திர—தூர்வாச நடைமுறையில், அப்பாக்கியும் கையுமாக நாடாளுகிறார்கள்!

நஷ்டஈடு

போதுமானதல்லவாம்!

கோலார் தங்கச் சுரங்க முதலாளிகள் கூற்று

கோலார் சுரங்கத்தில் புதிய கனிப் படிவங்களை கண்டுபிடிப்பதற்கு அந்த நிறுவனத்தின் நிறைய செலவிட்டிருப்பதாகவும், பூமிக்குக் கீழ் 600 மைல் நீள டன்னல்கள், ரயில்கள், என்ஜின்கள், மின்சார விளக்கு, டெலிபோன் முதலிய சாதனங்களுடன் இருப்பதாகவும், கம்பெனியின் சொத்து மதிப்பீடு அப்பகுதியில் ரூ 8 கோடி என்றும், ஆ.வே, உத்தேசிக்கப்பட்டுள்ள ரூ 119 இலட்சம் நஷ்டஈடு மிகக் குறைவானதென்றும், ஏற்கக்கூடியது அல்லவென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பழத் தயாரிப்பிலும் கலப்படம் செய்தார்களாம்!

மூன்று உற்பத்தியாளர்மீது நடவடிக்கை

புதுடில்லி, ஆக. 9—

டில்லியிலும், லக்னோவிலும் உள்ள சில பழத் தயாரிப்பாளர்கள் பழத் தயாரிப்பில் கலப்படம் செய்ததற்காகவும், தொழிற்சாலைகளை ஆரோக்கியத்திற்குக் கேடு விளைவிக்கும் நிலைமைகளில் வைத்திருந்ததற்காகவும், முறையான லைசென்சு இன்றி உற்பத்தியை மேற்கொண்டு வந்ததற்காகவும், அவர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டு குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்பட்டதின்மீது அவர்களுக்கு தலா ரூ. 100 அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது.

முடிவை மாற்றிக்கொள்ளமாட்டோம்

'சுதந்திரத்தைப் பாதுகாப்போம்'

எகிப்தியத் தூதுவர் முழக்கம்

பாரிஸ், ஆக. 9—

"சூயஸ் கால்வாயை தேசிய மயமாக்குவது என்ற முடிவை எகிப்து ஒருபோதும் மாற்றிக் கொள்ளாது"

என்று, பாரிசில் உள்ள எகிப்தியத் தூதுவர் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்

"எகிப்தின் ஆதிபத்திய உரிமைகளை உள்ளடக்கிய செயல்தான், சூயஸ் கால்வாயை தேசிய மயமாக்கியிருப்பது; எகிப்து தனது முடிவை மாற்றிக்கொள்ளாது என்பது முற்றிலும் உண்மையாகும்.

"பிரிட்டனும் பிரான்சும் போர் முஸ்தீபுகளில் இறங்கியிருப்பது அவர்களுடைய சாதுர்யக் குறைவையும், தூரதிருஷ்டி இன்மையையும் காட்டுகிறது; மேலும் அர்த்தப்போக்கு காலனி ஆதிக்கத்தின் சக்தியற்றுப்போன நிலையையும் சொல்லுவதாகும்,"

என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

'எகிப்து தனது சுதந்திரத்தை எல்லா வகையான ஆக்கிரமிப்புகளுக்கு எதிராகவும் காப்பாற்றிக் கொள்ளும்' என்றும் அந்த அறிக்கை முழக்குகிறது.

★

'நூற்றுக்குத் தொண்ணூறு பேர் பயனடையமாட்டார்கள்'

'தறிக்கு 6 பேர் வேலை இழப்பர்'

விசைத்தறி புகுத்துவதை எதிர்த்து மத்திய மந்திரியிடம் மனு

"கைத்தறிகளிடையே விசைத்தறிகளைப் புகுத்துவதால் 100-க்கு 90 பேர் பயனடையமாட்டார்கள்"

என்று கோவை நெசவுத் தொழிலாளர் சங்கம் மத்திய சர்க்கார் கைத்தொழில் வர்த்தக இலாகா மந்திரி டி. டி கிருஷ்ணமாச்சாரியிடம் சமர்ப்பித்த ஒரு 'மகஜரில்' குறிப்பிட்டிருக்கிறது.

"விசைத்தறிகளைப் புகுத்துவதால் ஒரு தறிக்கு 6 பேர் வேலை இழப்பார்கள்" என்றும் மகஜரில் குறிப்பிட்டுள்ளனர்.

கைத்தறி துணிகளுக்கு ஆலைத் துணிகள் போட்டியாக இருக்கக்கூடாதென்பதால், தானே இயங்கும் விசைத்தறிகளின் உற்பத்தியை வெளிநாடுகளுக்குத்தான் ஏற்பாடு செய்யவேண்டும் என்ற சர்க்கார் முடிவு செய்திருப்பதை சங்கம் வரவேற்றுள்ளது; ஆனால், வெளிநாடுகளின் சுயதேவைப்பூர்த்திக் கொள்கை காரணமாக நாளாவட்டத்தில் அந்த உற்பத்திகளையும் உள்நாட்டிலேயே விற்பனை செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடும் என்று கவலை தெரிவித்து, விசைத்தறிகளைப் புகுத்தும் நோக்கத்தைப் புனராலோசனை செய்யவேண்டுமென்று மகஜரில் கோரப்பட்டிருக்கிறது.

கலர் புடவை, கரை போட்ட வேஷ்டி ஆகியவற்றின் உற்பத்தியைக் கைத்தறியாளர்களுக்கு ஒதுக்க வேண்டுமென்று சங்கம் கோரியுள்ளது.

நூல்களை நியாய விலையில் கிடைக்கும்படி செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

கேரள - கர்நாடக இணைப்பிற்கு!

'கர்நாடகக் காங்கிரஸ் ஒருபோதும் ஒருப்படாது'

ஹூப்ளி, ஆக. 9—

"கேரளத்துடன், கர்நாடகம் இணைந்த ஒரு இரு மொழி மாநில அமைப்பு குறித்து, கர்நாடகப் பிரதேசக் காங்கிரஸ் ஒருபோதும் ஒருப்படாது,"

என்று, கர்நாடக காங்கிரஸ் தலைவர் சனபாசப்பா அம்ளி, பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

மக்கள் சபையில் இரு உறுப்பினர்கள் கேரள—கர்நாடக இணைப்பிற்காக எடுத்துவரும் முயற்சி குறித்து கருத்தறிவிக்கும்போதே அவர் அப்படிக் கூறியிருக்கிறார்.

மணிக்கு 19,000 மைல் வேகம்!

பூமியைச் சுற்றும் 'செயற்கை கிரகம்' பற்றி புதிய தகவல்

வாஷிங்டன்—

'சிறிய சந்திரன்' என்ற செயற்கை கிரகத்தைப் பற்றி தம் மதிப்பீட்டை, அமெரிக்க கடற்படை ஆராய்ச்சிச் சாலையைச் சேர்ந்த விஞ்ஞானிகள் அதிகரித்துள்ளனர்.

800 அல்லது 900 மைல் உயரத்துக்குத்தான் 'இச்செயற்கை கிரகம்' செல்லக்கூடுமென அவர்கள் ஏற்கனவே குறிப்பிட்டிருந்ததை பூமிக்குமேல் 1,500 மைல் உயரத்துக்குச் செல்லக்கூடுமென அவர்கள் இப்பொழுது தெரிவிக்கின்றனர்.

பூமியைச் சுற்றி இந்த செயற்கை கிரகத்தின் வேகம் மணியொன்றுக்கு 18,000 மைலாக இருந்தது 19,000 மைலாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஐதராபாத் மந்திரிகள்

இருவர்மீது கண்டனத் தீர்மானம்

ஐதராபாத், ஆக. 9—

ஐதராபாத் மந்திரிகள் இருவர் மீது கண்டனத் தீர்மானங்கள் கொண்டு வருவதற்கு எதிர்க் கட்சியினர், சபைத் தலைவரின் அனுமதி பெற்றிருக்கின்றனர் என்று தெரிய வருகிறது.

ரெவினியூ மந்திரி ரங்கா ரெட்டி மீதும், தொழிலாளர் மந்திரி ஜி எஸ். மெல்கோட் மீதும்தான் அந்தக் கண்டனத் தீர்மானங்கள் கொண்டுவரப்படுகின்றன.

ஆகஸ்டு 14-ந் தேதியன்று தீர்மானங்கள்மீது விவாதம் நடைபெறுமாம்.

நவம்பர் முதல் புதிய மாநிலங்கள்!

மாநிலப் புது அமைப்பு, வரும் நவம்பர் முதல் தேதிமுதல் அமுலாகும்.

'அக்டோபர் முதல் அமுல் செய்வது' என்று மாநில சீரமைப்பு மசோதா கூறுகிறது.

'இதனை நவம்பர் முதல் அமுலாக்கவேண்டும்' என்ற பி. சோ. உறுப்பினர் குருபாதசாமியின் திருத்தம் மக்கள் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

ரஷ்யா கலந்து கொள்ளுமாம்!

லண்டனில் மூன்று வல்லரசுகள் கூட்டும் சூயஸ் தகராறுகளான மாநாட்டில் கலந்துகொள்ள ரஷ்யா சம்மதம் தெரிவித்திருப்பதாயும், அதே நேரத்தில் சீனு உள்ளிட்ட மேலும் 22 நாடுகளையும் மாநாட்டில் கலந்துகொள்ள அழைக்க வேண்டும் என்றும் கூறியிருக்கிறதாம்.

மேலும், சூயஸை எகிப்து தேசிய மாக்கியது சட்டவிரோதமானதல்லவென்றும், மேற்கு வல்லரசுகள் கூறுவதுபோல கால்வாய் சர்வதேசச் சொத்து அல்லவென்றும் ரஷ்யா தெரிவித்திருப்பதுடன், மாநாட்டைச் சிலநாள் ஒத்திவைக்க வேண்டும் என்றும் கூறியிருக்கிறதாம்.

சைப்ரஸ் வீரர் மூவர்

தூக்கிலிடப்பட்ட கொடுமை

தீவு முழுவதும் பொது வேலை நிறுத்தம்

நிகோசியா, ஆக. 9—

ஏற்கனவே அறிவித்திருந்தபடி சைப்ரஸ் விடுதலை வீரர்கள் மூவர் இன்று அதிகாலை 3 மணிக்கு தூக்கிலிடப்பட்டிருக்கின்றனர்.

இந்த இளைஞர்களுக்குத் தரப்பட்ட கொடூர் தண்டனையை எதிர்த்து சைப்ரஸ் ஒருடலாய்த் திரண்டு கண்டனக் குரல் கொடுத்திருக்கிறது.

சைப்ரஸ் முழுவதும் பொது வேலைநிறுத்தமும் ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றிருக்கின்றன.

அந்த மூன்று வீரர்களும் தூக்கிலிடப்படும்போது சிறைக்குள்ளேயே கைதிகள் பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தித் தங்களின் கண்டனத்தை வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

கிரேக்கத் தலைநகரான ஏதென்சில் துக்கநாள் கொண்டாடப்பட்டிருக்கிறது. கிரேக்க வெளிவிவகார இலாகா மந்திரி, தூக்கிலிடப்பட்ட வீரர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் 'கருப்புடை' அணிந்து வந்திருக்கிறார்.

ஆறு எதிர்க்கட்சிகள் ஒன்றுபடுகின்றன

மேற்கு பாகிஸ்தானில் நிகழ்ச்சி

லாகூர், ஆக. 9—

மேற்கு பாகிஸ்தானில் உள்ள எதிர்க்கட்சிகளில் ஆறு கட்சிகள் ஒன்று சேர்ந்து ஒரு அரசியல் இயக்கம் உருவாக்குவதென முடிவாகியிருக்கிறதாம்.

இந்த ஆறு கட்சிகளில், சட்ட விரோதமாக்கப்பட்ட செஞ்சட்டை இயக்கமும் ஒன்றாகும்.

சிறையில் வாடும் கான் அப்துல் கபார்கானை சிந்து அவாமி லீக் தலைவர்கள் சந்தித்தபின், சில வாரங்களாக நடைபெற்ற விவாதங்களுக்குப் பிறகு இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறதாம்.

எல்லைக் குழு அமைக்கமாட்டார்களாம்

மத்திய அமைச்சர் பண்டித பந்த் கூறுகிறார்

பல்வேறு மாநிலங்களுக்கிடையேயும் எழுந்துள்ள எல்லைத்தகராறுகளைத் தீர்த்துவைக்க ஒரு எல்லைக்குழு நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்பதற்கு, மக்கள் சபையில் பண்டிதபந்த் மறுத்துவிட்டிருக்கிறார்.

சுமார் 170 எல்லைத் தகராறுகள் கிளம்பியுள்ளன என்றும், இவற்றை எல்லாம், இந்த சபை பரிசீலித்துக் கோண்டிருப்பது சாத்தியமில்லையெனவும் அவர் தெரிவித்தாராம்.

மாநிலங்களுக்கிடையேயுள்ள சிறு சிறு எல்லைத் தகராறுகளை, நிறுவப்படவிருக்கும் மண்டல சபைகள் கவனித்துக் கொள்ளும் என்றும் அவர் கூறினாராம்.

குதிரைப் பந்தய ஒழிப்பு

1958-ல்தான் பரிசீலனையாம்

'குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்காக இயற்றப்பட்ட சட்டத்தை அமுல் நடத்துவதை 1953-ல் 5 ஆண்டு காலத்திற்கு ஒத்திப்போட முடிவு செய்திருக்கிறோம்; எனவே 1958-ல் மீண்டும் இது குறித்து சர்க்கார் பரிசீலனை செய்யும்' என்று நிதி மந்திரி சுப்பிரமணியம் சட்டசபையில் கூறியிருக்கிறார்.

'பட்டம் அளிப்பு விழாவின்போது குறள் பரிசு தரவேண்டும்'

கிறித்துவக் கல்லூரி வள்ளுவர் விழாவில் க. அன்பழகன்

6—8—56-ல், சென்னை தாம்பரம் கிறித்துவக் கல்லூரித் தமிழ்ப் பேரவையின் சார்பில், மாணவத் தோழர் இர. பாண்டியராசு தலைமையில் நடைபெற்ற வள்ளுவர் விழாவில், வள்ளுவரின் பெருமைகளையும் அவரது செயல் முறைகளையும் குறித்துத் தோழர் க. அன்பழகன் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டதாவது :—

"ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின் போது பட்டதாரிகளுக்கெல்லாம் பட்டமளிப்பு விழாவின் போது சென்னைப் பல்கலைக் கழகம் விவிலிய நூல் பரிசு கொடுத்ததுபோல் இப்போது திருக்குறள் வழங்கவேண்டும்."

விழா இறுதியில் தோழர் த. சாமிதாசன் நன்றி கூறினார்.

ஊழல்புரியும் வியாபாரிகள்

சர்க்கார் நடவடிக்கை எடுக்குமாம்

புதுடில்லி, ஆக. 10—

"சர்க்கார் சேமிப்பிலிருந்து தங்களுக்கு விற்கப்பட்ட கோதுமையை மக்களுக்கு விற்பனை செய்வதில் ஊழல்கள் செய்யும் வியாபாரிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்" என்று உணவு விவசாய மந்திரி மாநிலக் கள் சபையில் கூறியுள்ளார்.

விதிக்கப்பட்ட விலையைப் பொருட்படுத்தாமல் அதிகவிலைக்கு சிலர்—கோதுமையை விற்பதாகத் தனக்கு தெரியவந்ததாகவும் அவர் கூறினார்.

ஏழைகளுக்கு இலவசமாக கருத்தடை மாத்திரைகள்

புதுடில்லி, ஆக. 9—

குடும்பக் கட்டுப்பாட்டுக்கான கருத்தடை மாத்திரைகள் தற்போது அரசாங்கத்தால் பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றதென்றும், பணம் கொடுத்து வாங்கும் சக்தியில்லாத ஏழை மக்களுக்கு அரசாங்க மருந்தகக் குடும்பக் கட்டுப்பாடுப் பகுதிகளில் இலவசமாக மாத்திரைகள் வழங்கப்படுமென்றும், மக்கள் சபையில் இந்திய சுகாதாரத் துறைத் துணை அமைச்சர் திருமதி சந்திரசேகரன் கூறியுள்ளார்.

அறிவாளிகளுக்கே வாக்களியுங்கள்

வியாபாரிகளுக்கு வர்த்தக சங்கத் துணைத் தலைவர் வேண்டுகோள்

பரமக்குடி, ஆக. 6—

'வியாரிகளே! வருகிற பொதுத் தேர்தலில் அறிவாளிகளுக்கே 'ஓட்' போடவேண்டும்; அப்போதுதான் வியாபாரிகளின் குறைகளைத் தீர்க்கப் பாடுபடுவார்கள்''

என்று, தமிழ் நாடு வர்த்தக சங்கத்தின் துணைத் தலைவரான காளிதாஸ் சேட் அவர்கள், பரமக்குடியில் வியாபாரிகள் சங்கச் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கூறியுள்ளார்.

"வியாபாரிகள் பல கஷ்டத்திற்கு உள்ளாகி வருகின்றனர். ஒருமுனை வரி விதிக்கவேண்டுமென்று சர்க்காரிடம் முறையிட்டும் 3 வருடகாலமாகப் பலனளிக்கவில்லை. திருவனந்தபுரம், ஆந்திரா போன்ற இடங்களில்கூட அரசாங்கங்கள் ஒருமுனை வரியை ஏற்றுக் கொண்டுவிட்டார்கள். இனி, அடுத்து சென்னையில் கூடப்போகும் வியாபாரிகள் மாநாட்டில் முடிவாக இதுபற்றி முடிவு செய்யப்படும்" என்றும் அவர் கூறினார்.

"இந்தியாவில் இதுவரையில் 1,351 மலேரியா வைத்திய அதிகாரிகளும், 249 எஞ்சினீயர்களும், 851 இன்ஸ்பெக்டர்களும், மலேரியாக் கட்டுப்பாட்டுப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்" என்று மத்திய சுகாதார மந்திரி, மக்கள் சபையில் தகவல் தந்தார்.

தென்னாப்பிரிக்க சர்க்காரின் நிறவெறித் தாண்டவம்

இந்தியர் காங்கிரஸ் கண்டனம்

பாசிசப் போக்கை முறியடிக்க வெள்ளையரல்லாதார் ஒன்றுபட வேண்டுகிறது

ஜோகனஸ்பர்க், ஆக. 9—

'தென்னாப்பிரிக்க சர்க்கார், மேற்கு ஜோகனஸ்பர்க்கில் வாழும் வெள்ளையரல்லாதாரை வெளியேறுமாறு உத்திரவு பிறப்பித்திருப்பதானது, மனித அடிப்படைகளை மீறும் கொடுஞ்செயலாகும்; மேலும், வெள்ளையரல்லாதாரை வெளியேற்றுவதின் மூலம் அவர்களது வீடுகள், சொத்துக்களையெல்லாம் பறிமுதல் செய்யும் கொள்ளைச் செயலுமாகும்,'' என்று, டிரான்சுவால் இந்தியர் காங்கிரஸ் கண்டனக் குரல் எழுப்பியிருக்கிறது.

"தென்னாப்பிரிக்க சர்க்காரின் நிறவெறிகொண்ட இந்த உத்திரவு, படிப்படியாக இந்தியர்களை தென்னாப்பிரிக்காவிலிருந்து வெளியேற்றுவதற்கான சூழ்ச்சியை நோக்கமாகக்கொண்டது,'' என்றும் காங்கிரஸ் எடுத்துரைத்திருக்கிறது.

உலகம் ஒப்புக்கொண்டிருக்கிற மனித அடிப்படை உரிமைகளை தெ. ஆ. சர்க்கார், பகிரங்கமாக மதிக்க மறுத்துவரும் ஆகாத போக்கு குறித்தும் தற்போதைய நிலைகளைக் குறித்தும், டிரான்சுவால் காங்கிரஸ் உலக நாடுகளுக்கு —குறிப்பாக ஐ. நா. உறுப்பினர்கள் அனைவருக்கும் தகவல் அனுப்பியிருக்கிறது.

"வெள்ளையரல்லாத மக்கள் ஒன்று திரண்டு, அமைதியாகத் தெ. ஆ. சர்க்காரின் இந்தப் பாசிசப் போக்கை — நிறவெறித் தாண்டவத்தை எதிர்த்துப் போராட வேண்டும் என்றும் காங்கிரஸ் கேட்டுக்கொண்டிருக்கிறது.

தென்னாட்டில் ரேயான் தொழிற்சாலை

துவங்குவது பற்றி ஆலோசனையாம்

தென்னாட்டில், ரேயான், நார் பட்டு தொழிற்சாலை ஆரம்பிப்பது பற்றி, மத்திய வர்த்தக மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி, கோவையில் தென் இந்திய ஆலை சொந்தக்காரர்கள் சங்க உறுப்பினர்களுடன் கலந்து ஆலோசித்தார்.

"பிரதி ஆறு மாதங்களில் சுமார் ரூ. 1 கோடி பெறுமான 60, 70 இலட்சம் பவுண்டு நார் பட்டும், ரேயானும் தென்னிந்தியாவில் இறக்குமதி செய்யப்படுகிறது. தென்னாட்டில் நார்பட்டு, ரேயான் தொழிற்சாலை அமைக்க அயல் நாட்டுக் கம்பெனிகளின் நிதி தொழில் நுட்ப உதவி பெறுவதற்காக அயல் நாடுகளுக்கு ஆலைச் சொந்தக்காரர்கள் தூதுக் குழு ஒன்று சென்று வரலாம்'' என்று மந்திரி யோசனை கூறினார்.

20 டன் தொழிற்சாலை நிறுவ சுமார் ரூ. 6 கோடி மூலதனம் வேண்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது; ஆனால் அமைச்சர் சுமார் ரூ. 3 அல்லது 4 கோடி செலவில் தொழிற்சாலை நிறுவலாம் என்றும், மத்திய சர்க்கார் கடன் அளித்து உதவிபுரியும் என்றும் கூறினார்.

போதுமான தண்ணீர் வசதியுள்ள இடங்களிலேதான் இது ஆரம்பிக்கலாமாம். மேட்டுப்பாளையம், மேட்டூர் தகுதியான இடம் எனக் கூறப்படுகிறது.

★

சாத்தியமென்கிறார் மாநில மந்திரி

சென்னை, ஆக. 10—

நிதி மந்திரி சி. சுப்பிரமணியம் இங்கு பாங்கர்கள், தொழிலதிபர்கள், வர்த்தகர்கள் கூட்டத்தில் பேசுகையில், கூடியவிரைவில் கோயமுத்தூருக்கருகில் ரூ. 12 கோடி செலவில் ரேயான் தொழிற்சாலை அமைக்கப்படுவது சாத்தியமென்றார்; இந்த விஷயம் மாநிலத் தொழில் இலாகாவின் தீவிர பரிசீலனையிலிருப்பதாகக் கூறினார்.

கழகச் செய்திகள்

பெரியகொல்லப்பட்டியில் தி. மு. க. துவக்க விழா

சாத்தூர் வட்டம், பெரிய கொல்லப்பட்டி தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம், தோழர் எஸ். கலிங்கன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் மு. வசனப்பித்தன். இராமச்சந்திரன், நடராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பொன்மலை—மேலக் கற்கண்டார்கோட்டை தி. மு. கழகம்

2—8—56ல், கழக இல்லத்தில் தோழர் கே. துரைராஜ் தலைமையில் கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது, தோழர் எஸ். கிருஷ்ணசாமி நாயாரின் மறைவு குறித்து அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது பின்னர், தோழர் எ. சுந்தரம் துணைச் செயலாளராகவும், தோழர்கள் நா. சித்தார்த்தன், சி. நடராசன் இருவரும் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தோழர்கள் பி. தங்கவேலு, இராகவன், முத்தமிழன், என். கோவிந்தராஜ், எம். முருகன் ஆகியோர் கொண்ட கலைக்குழு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது.

மாயூரத்தில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

5—8—56 மாலை 6-30 மணிக்கு மாயூரம் நகர தி. மு. கழகச் சார்பில், திருவிழந்தூர் கடைவீதியில் தோழர் அ. அண்ணாமலை தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கே. எஸ். சௌந்தராசன், என். கிட்டப்பா, சி. ஐயப்பு, எஸ் ஆர். இராதா ஆகியோர் தற்கால அரசியல் நிலை பற்றியும், தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபடுவது குறித்தும் பேசினர்.

கூட்ட இறுதியில் சிதம்பரம் கெம்பு ஸ்டுடியோவால் தயாரிக்கப்பட்ட மாநில மாநாட்டு நிகழ்ச்சிகளடங்கிய திரைப்படம் காண்பிக்கப்பட்டது.

ஆலந்தூர் தி. மு. கழகம்

4-8-56 இரவு 10-15 மணிக்கு கழகஇல்லத்தில், தோழர் கோபால் தலைமையில் நடைபெற்ற செயற்குழு உறுப்பினர் கூட்டத்தில், 1956 மே முதல் 1956 ஜுலை வரையுள்ள 3 மாத வரவு - செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது; செயலாளர் மு தங்கவேலு அவர்களின் விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வேடசந்தூரில் தி. மு. கழகத் துவக்க விழா

6—8—56-ந் தேதி மாலை 6-30 மணிக்கு வேடசந்தூர் தி மு கழகக் கிளை துவக்க விழா தோழர் சமதர்மம் தலைமையில் நடைபெற்றது. தோழர் அ. வே. சௌந்தராசன் கழகக் கொடியை யேற்றி வைத்துச் சொற்பொழிவாற்றினார். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களிடமிருந்து வாழ்த்துச் செய்தி வந்திருந்தது.

தேர்தல் நிதி அனுப்புவோர் கவனிக்க :

தி. மு. கழக தேர்தல் நிதிக்கு பணம் அனுப்பும் தோழர்கள், 'பொதுச்செயலாளர், தி. மு. கழகம், அறிவகம், இராயபுரம், சென்னை-13' என்ற முகவரிக்கே அனுப்ப வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

—தி. மு. க. தலைமை நிலையம்

ஆசிரியருக்குக் கடிதம் :

வாழ்வதற்கு வகை செய்ய முன்வருவார்களா ?

ஐயா,

சென்னை—சைனுபசார் நடைபாதை வியாபாரிகள் சார்பாக மிக்க வருத்தத்துடன் வேண்டிக் கொள்வதாவது :—

"நாங்கள் மிகவும் ஏழைகள்; ஒரு நாள் வியாபாரம் செய்யாவிட்டால் எங்களுக்கும் எங்கள் குடும்பங்களுக்கும் சாப்பாட்டிற்குத் திண்டாட்டம். இப்படி இருக்கும்போது கடந்த பத்து தினங்களாக, சென்னை மேயர் அவர்களின் உத்திரவையொட்டிப் போலீசார், எங்களை வியாபாரம் செய்யாவிடாதபடி தடுத்துவருகின்றனர். இதை மேலதிகாரிகள் உடனடியாகக் கவனித்து முன்போல ஏதாகிலும் சிறு இடத்தை எங்களுக்கு ஒதுக்கி, 'லைசென்ஸ்' தந்து எங்களைக் காப்பாற்ற முன்வருமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

எம்.வி.எம். அப்துல் ரகிமான்,
சென்னை.

செய்திச் சுருள்

★

தமிழ் வகுப்பு

சென்னை—வண்ணை திரு. வி.க. இலக்கிய மன்றச் சார்பில், வண்ணை தியாகராயர் கல்லூரியில் தினமும் மாலை 6-30 முதல் 8 மணி வரை முதனிலை வகுப்புகள் நடைபெறுகிறது. 16—8—56ல் தமிழ் வித்துவான் புகுமுகத் தேர்வு வகுப்பு துவக்கப்படும்.

சென்னை பல்கலைக் கழகத் தேர்வுக்குப் படிக்க விரும்புவோரும் தமிழ் கற்க விரும்புவோரும் இலவச வகுப்பில் சேர்ந்து பயனடையக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அரிசிக்கரையில் திராவிடர் படிப்பகத் திறப்பு

6—8—56 இரவு 6 மணி அளவில், மைசூர் மாநில அரிசிக்கரை ஆசன் ரோட்டில், திராவிடர் படிப்பகத் திறப்புவிழா, தோழர் அனுமந்தராவ் தலைமையில் நடைபெற்றது. தோழர் என். கே. மூர்த்தி படிப்பகத்தைத் துவக்கிவைத்தார்; தோழர்கள் சி. இராவணன், கே. சாமுவேல், இராமாராவ் ஆகியோர் பேசினர். பின்னர், படிப்பக நிர்வாகக் குழு அமைக்கப்பட்டது.

திருவள்ளுவர் நினைவு நாள்

4—7—56 சனிக்கிழமை மாலை 6-30 மணிக்கு, கழக மனையில் விழா கொண்டாடப்பட்டது. புலவர் சீனுவாசன் தலைமையில் புலவர் திரு. இரா. சொக்கலிங்கம் திருக்குறள் குறித்து விரிவுரையாற்றினார். தோழர் மா. சண்முகன் நன்றி நவின்றார்.

விருதுநகர் அண்ணா மன்றத் திறப்பு விழா

4—8—56ல், நீராவித் தெரு 18-வது வார்டில், தோழர் சு இரத்தினம் அவர்களால் மேற்படி மன்றம் திறந்துவைக்கப்பட்டது. தோழர் மா. முத்தையா கொடியேற்றிவைத்தார். பின்னர், மன்ற நிர்வாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மறைவு

வேலூர் 'நம் நாடு' விற்பனையாளர் தோழர் ஜி. சிவானந்தம் அவர்களுடைய தங்கையின் பெண் மகவு கடந்த 6—8—56-ல், இயற்கையெய்தியதாக வருத்தத்துடன் அறிவித்துக்கொள்கிறார்.

வேண்டுமென்றே தடையை...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சிறையில் மூடப்பட்டுவிட்டதால், ஊர்வலம் செய்வதற்கும் கூட்டம் நடத்துவதற்கும் குறிப்பிட்டுள்ள காலத்தை அறிந்து கொள்ளமுடியாமல், 'அனுமதி பெற்றிருக்கிறோம்' என்ற உறுதிப்பாட்டில் நடந்துகொண்டுள்ளதாகக் குற்றவாளிகள் சார்பில் கூறப்பட்டிருக்கிறது. இதற்கு அரசாங்க வழக்கறிஞரோ, 'சத்தியநாராயணா மட்டுமே அனுமதியை வைத்திருப்பதால், மற்ற குற்றவாளிகளுடன் அவர் ஊர்வலத்தில் வாராததால், மற்ற குற்றவாளிகள் அந்த அனுமதியைப் பயன்படுத்த முடியாது' என்கிறார்.

"அந்த வாதத்தை என்னால் ஏற்க முடியவில்லை. கொடுக்கப்பட்டுள்ள அனுமதி ஒரு கட்சிக்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறதே அல்லாது, ஒரு தனி நபருக்காகக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. அரசாங்க வழக்கறிஞரின் கூற்று, 'ஒவ்வொரு தனி நபரும் தனித்தனியாகத் தன் பெயரில் அனுமதி பெறவேண்டும்' என்ற பொருத்தமற்ற முடிவைத் தருவதாக இருக்கிறது.

"காங்கிரஸ் கட்சி நீங்கலாக மற்ற கட்சிகள் அனைத்தும் அர்த்தாலில் கலந்து கொண்டதாகவும், ஒரு கட்சித் தலைவர் மூலமாக அனுமதி கோரப்பட்டதாகவும் போலீஸ் சார்பு இரண்டாவது சாட்சி கூறியுள்ளார். சத்தியநாராயணா, தான்பெற்ற அனுமதியுடன் சிறைக்குள் அடைக்கப்பட்டு விட்டதால், அனுமதியில் உள்ள காலக் குறிப்பை மற்றவர்கள் தெரிந்திருக்க முடியாது; எனவே, அந்தத் தேதியில் கூட்டம் நடத்துவதற்கும் ஊர்வலம் செல்வதற்கும் தங்களுக்கு அனுமதி கிடைத்து விட்டதாகக் குற்றவாளிகள் உணரலாயினர்.

"அனுமதியுடன் சத்தியநாராயணாவை சப்-இன்ஸ்பெக்டர் தடுத்துவிட்டதின் மூலம், அனுமதியில் குறிப்பிட்டுள்ள காலத்தைப் பொதுமக்கள் தெரிந்து கொள்ளமுடியாமல் சப்-இன்ஸ்பெக்டர் செய்திருக்கிறார் என நான் முடிவாகக் கருதுகிறேன். மாலையில் ஊர்வலம் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்ற நன்னம்பிக்கையின் மீதே ஊர்வலம் சென்றதாகக் குற்றவாளிகள் சார்பில் கூறப்பட்டுள்ள வாக்குமூலத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

"விதிக்கப்பட்டிருந்தத் தடையை வேண்டுமென்றே மக்கள் மீறவில்லை; தங்களுடைய தலைவர் சத்தியநாராயணாவிற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்ற நன்னம்பிக்கையின்மீதே அவர்கள் செயல்பட்டு இருக்கிறார்கள்.

"பலாத்கார உணர்ச்சியுடன் மக்கள் நடந்துகொள்ளவில்லை. போலீஸ்மீது கல் எறியவில்லை.

"போலீஸ் சார்பு ஐந்து, ஆறு, ஏழு சாட்சிகள் தங்களுடைய தோழரை விடுவிப்பதற்காகக் குருதி கொட்டுவோம் எனக் கூச்சலிட்டதாகக் கூறியுள்ளனர். போலீஸ் சார்பு பத்தாவது சாட்சியான சப்-இன்ஸ்பெக்டர், மக்கள் எழுப்பிய முழக்கம்பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. குருதி கொட்டப் போவதாக மக்கள் முழக்கமிட்டது குறித்து, போலீஸ் சார்பு ஏழாவது சாட்சியான தலைமை—கான்ஸ்டபிள், அதுபற்றி சப்-இன்ஸ்பெக்டரிடம் எதுவும் கூறவில்லை எனத் தானே ஒப்புக்கொண்டும் உள்ளார். போலீஸ் சார்பு ஐந்தாவது, ஆறாவது சாட்சிகள் தங்களுடைய இ. பி. கோ. 162 - பிரிவு வாக்குமூலத்தில் இரத்தம் சிந்துவது பற்றி தன்னிடம் ஒன்றும் குறிப்பிடவில்லை என சப்-இன்ஸ்பெக்டர் ஒப்புக்கொண்டுள்ளார். அம்முழக்கம் பற்றிய குறிப்பு எதுவும் முதல் குற்றப் பதிவு அறிக்கையில் இடம் பெற்றிருக்கவில்லை. இவைகளை எல்லாம் ஏற்று ஆராயும்பொழுது, இரத்தம் சிந்துவதாக முழக்கமிடப்பட்டது எனப் போலீஸ் சார்பு ஐந்து, ஆறுவது சாட்சிகளின் கூற்று, வெறும் பின் நினைப்பின் விளைவு என்றே நான் நம்புகிறேன்."

"போலீஸ் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் இருந்தாலே கூட்டம் கலைந்துபோயிருக்கும். அன்று தம்மம்பட்டி அமைதியாகவே இருந்தது என ஒப்புககொள்ளபபட்டு இருக்கிறது. பஸ் போக்குவரத்து நடைபெற்றது; பள்ளிகள் பணியாற்றின; மக்களும் கலக உணர்ச்சியின்றி அமைதியாக இருந்து வந்தனர்; எந்தவித முழக்கத்தையும் அவர்கள் முழங்கவில்லை. அந்த நேரத்தில், 'ஊர்வலம் செல்ல அனுமதி கிடைத்திருக்கிறது, என்ற தவறான நன்னம்பிக்கையின்மீது அவர்கள் செயல்பட்டு இருக்கிறார்கள். இந்த உண்மைகளை எலலாம் கருத்துள்கொண்டு தடை உத்தரவை மீறவேண்டும் என்ற கருத்தில், வேண்டுமென்றே ஊர்வலத்தினர் தடையை மீறவில்லை என நான் முடிவிற்கு வருகிறேன். அவர்கள் ஒன்றுகூடி இருந்ததும் சட்ட விரோதமானக் கூட்டம் எனவும் கூறுவதற்கில்லை."

இவ்வாறு தம்மம்பட்டி வழக்கை விசாரித்த ஆத்தூர் சப்-மாஜிஸ்திரேட் தமது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இருபத்தைந்து தோழர்கள் மீது போலீஸ் வழக்குத் தொடுத்திருந்தது. அதில் மூவரை மட்டுமே குற்றவாளிகள் எனக் கண்டு, மற்றவர்கள் அனைவரையும் விடுதலை செய்து விட்டார் மாஜிஸ்திரேட்.

குற்றவாளிகள் எனக் கண்ட மூவருக்கும், அவர்கள் செய்துள்ள குற்றம் வெறும், 'கீழ்ப்படியாமை', 'டெக்னிகல்' குற்றம் எனக்கூறி, அற மன்றம் கலையும்வரை தண்டித்துள்ளார் மாஜிஸ்திரேட்.

குற்றஞ் சாட்டப்பட்டுள்ள இராமலிங்கம், துப்பாக்கிக் குண்டடிக்குப் பலியாகி இன்னும் குணமடையாது மருத்துவ மனையிலேயே இருந்துவருவதால், அவர் மீதுள்ள வழக்கு மட்டும் இன்னும் முடிவு செய்யப்படாமல் இருந்துவருகிறது.

துணி விலை ஏற்றம்

அவசியமானல் நடவடிக்கையாம்

புதுடில்லி, ஆக. —9

இந்தியாவில் துணிவிலை ஏறி வருவதை சர்க்கார் கவனித்து வருவதாகவும் இதனைத் தடுக்க அவசியமானபோது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தொழில் வர்த்தக இலாகா மந்திரி டி. டி. கே. மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

15 மாநிலங்கள் கடன் எழுப்புகின்றன

15 மாநில சர்க்கார்கள், மொத்தத்தில் ரூ 64 கோடிக்குக் கடன் எழுப்புவதாகவும், அக்கடன்களுக்கு 4 சதவிகிதம் வட்டி தரப்படுமெனவும் ரிசர்வ் பாங்கி அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளது; அம்மாநிலவாரியாக விவரம் இங்கு தரப்படுகிறது :—

	கோடி ரூபாய்
ஆந்திரா :	6
பீகார் :	2
பம்பாய் :	$7\frac{1}{2}$
ஐதராபாத் :	2
மத்திய பாரத் :	1
மத்திய பிரதேசம் :	$1\frac{1}{2}$
சென்னை :	$12\frac{1}{2}$
மைசூர் :	4
ஒரிசா :	3
பஞ்சாப் :	2
இராஜஸ்தான் :	2
சவுராட்டிரா :	2
திரு-கொச்சி :	2
உத்திரப் பிரதேசம் :	8
மேற்கு வங்கம் :	7

சென்னை மாநிலம்தான் அதிகப் பட்சமாகக் கடன் எழுப்பியிருக்கிறது.

சென்னை சர்க்கார் எழுப்பும் கடன் எதற்காக?

சென்னை, ஆக. 10—

சென்னை சர்க்கார் இப்பொழுது எழுப்பியுள்ள கடன் தொகை மின்சார—பாசனத் திட்டங்களை அமுல் நடத்துவதற்கும், உள்ளாட்சிக் கழகங்களுக்கும் விவசாயிகளுக்கும் கடன் கொடுப்பதற்கும் பயன்படுத்தப்படும் என்று தெரிகிறது.

ரூ $12\frac{1}{2}$ கோடிக்குக் கடன் எழுப்புவதற்குச் சென்னை சர்க்கார் தீர்மானித்துள்ளனர்; இதற்கு 4 சதவிகிதம் வட்டி தரப்படுமாம்; ரூ. 100 மதிப்புள்ள கடன்பத்திரத்திற்கு ரூ. 99—12—0 செலுத்தினால் போதுமாம்; 1968 செப்டம்பர் 3-ந் தேதியன்று ரூ. 100 ஆக இக்கடன் திருப்பித் தரப்பட்டுவிடுமாம்.

பலமுனை விற்பனை வரிக்கு எதிர்ப்பு

திருநெல்வேலி, ஆக. 10—

பலமுனை விற்பனை வரியை எதிர்த்து இங்கு 'அர்த்தால்' மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது.

ரஷ்யப் பயணத்தை ஒத்திவைத்தார் !

எகிப்தியத் தலைவர் நாசர், தம்முடைய ரஷ்யப் பயணத்தை ஒத்திப் போட்டுவிட்டதாகச் செய்தி ஒன்று தரப்பட்டுள்ளது.

அகமதாபாத்தில்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ராஜ்கோட்டிலும், அகமதாபாத் மாணவர்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதற்கு அனுதாபமும் கண்டனமும் தெரிவிக்கும் வகையில், மாணவர்கள், பள்ளிகளையும் கல்லூரிகளையும் விட்டு வெளியேறி ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்றனர்.

மாணவர்களுடன் சேர்ந்து கொண்ட இளைஞர் கூட்டம் கடைகளையும், தொழில் நிலையங்களையும் மூடுமாறு கோரி, வீதிகள் வழியாக வலம் வந்தது என்றும், கூட்டத்திலிருந்த சிலர் சர்க்கார் பஸ்கள்மீது கற்களை வீசி கலாட்டா செய்ததாகவும் போலீசார் கூறியிருக்கின்றனர்.

எவரும் கைது செய்யப்படவில்லை என்றும், தடியடி போன்ற சிறு அடக்குமுறைகள்கூட நடைபெறவில்லை என்றும் போலீசார் கூறியிருக்கின்றனர்.

கோத்ரா எனும் இடத்திலும் மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்து, அகமதாபாத் அடக்குமுறைக்குக் கண்டனம் தெரிவித்திருக்கின்றனர்.

பாலன்பூர் எனும் நகரில், ஒரு பெரும் அர்த்தால் நடைபெற்றதாகவும் தகவல் கிடைத்திருக்கிறது.

திருமண அழைப்பு

அன்புடையீர்,

நாளது ஆவணித் திங்கள் (19—8—56) ஞாயிறு காலை 9-மணியளவில், என்மகன் செல்வன்: காங்கயனுக்கும், பேளுக்குறிச்சி மிட்டாதார் வி. சுப்பராய (கவுண்டர்) அவர்களின் மகள் செல்வி: மங்களம்மாளுக்கும் பேளுக்குறிச்சியில் எனது இல்லத்தில் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் திருமணவிழாவிற்குத் தாங்கள் வருகை தந்து சிறப்பிக்குமாறு பணிவன்புடன் வேண்டுகிறேன்.

குறிப்பு: இதனையே அழைப்பாகக் கருதி, திருமண விழாவில் தோழர்கள் யாவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

யானும் அவ்வண்ணமே கோருகிறேன் :
வி. சுப்பராய கவுண்டர்,
மிட்டாதார், பேளுக்குறிச்சி

தங்களன்புள்ள
ஜி. பி. சோமசுந்தரம்
பேளுக்குறிச்சி

அண்ணா

சுற்றுப்பயணம்

ஆக. 19 : காலை - பேளுகுறிச்சி
மாலை-இராசிபுரம்
20 : காலை-சேலம்
மாலை-குளத்தூர்

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

ஆக. 15 : பண்ணைக்காடு
16 : சிவகிரி
17 : திண்டுக்கல்
18 : சின்னத்தம்பி பாளையம்
19 : காலை - பேளுகுறிச்சி
மாலை-இராசிபுரம்
20 : காலை-சேலம்

சென்னை 18-வது வட்ட தி.மு.க. உறுப்பினர்கட்கு :

"26—8—56 மாலை 6 மணியளவில், கிளைக் கழக 6-ம் ஆண்டு விழாவை அண்ணா அவர்களைக் கொண்டு சிறப்பான முறையில் கொண்டாட முடிவு செய்யப்பட்டிருப்பதால், கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு ஒத்துழைப்புத் தர வேண்டுகிறேன்,"

என்று, கிளைக் கழகச் செயலாளர் தோழர் ச. கோ. நாராயணசாமி அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

பெயர் சூட்டு விழா

12—8—56 மாலை 6 மணியளவில், சென்னை 19-வது வட்ட தி. மு கழகச் செயலாளர் டி. நடராசன் அவர்கள் மகளுக்கு, பேராசிரியர் க அன்பழகன் அவர்கள் தலைமையில் பெயா சூட்டு விழா நடைபெறும்; தோழியர் சத்தியவாணி-முத்து அவர்கள் வாழ்த்துரை வழஙகுவார் பின்னர், 9 மணியளவில், எ. எஸ். சபதி—ஆர். நடராஜ் குழுவினர் இன்னிசையும், பேபி சுகந்தி—குமாரி வனமாலா . குழுவினர் நடனமும் நடைபெறும்.

இடம் : எண் 4, சேக்மோதீன் சுபேதார் சந்து, சென்னை-12.

சென்னைத் தமிழாசிரியர் கழகப் பொதுக்கூட்டம்

சென்னை பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் 12—8—56 மாலை 4 மணிக்கு பேராசிரியர் மயிலை-சிவ. முத்து அவர்கள் தலைமையில், மேற்படி கழகப் பொதுக் கூட்டம் நடைபெறும். கழகத்தை வலுப்படுத்தல், சட்டசபைத் தேர்தலில் தமிழாசிரியர்கள் கடமை முதலியன பற்றிப் பேசப்படும்.

பிரச்சாரக் கூட்டம்

12—8—56 மாலை 6 மணிக்கு, சென்னை 16-வது வட்டம் காளத்திப் பிள்ளைத் தெருவில், தோழர் எஸ். கோபால் தலைமையில் பிரச்சாரக் கூட்டம் ஒன்று நடைபெறும். தோழர்கள் பத்மனாபன், தி. அ. இராசேந்திரன், ஆ. இராசன், மா. தனபால் ஆகியோர் பேசுவர்.

கழகக் கூட்டம்

★

நெய்க்காரப்பட்டி :
14—8—56 இரவு 7 மணிக்கு
தலைவர் :
நா. கெங்காதரன்
பேசுபவர் :
சத்தியவாணிமுத்து

பிரச்சாரப் பயிற்சிக் கூட்டம்

12—8—56 காலை 9 மணிக்கு, 42-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் (4, நமசிவாய முதலி தெரு திருவல்லிக்கேணி) தோழர் எ. கே. நடராசன் தலைமையில் பிரச்சாரப் பயிற்சிக் கூட்டம் நடைபெறும்; தோழர்கள் பலர் பேசுவர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

12—8—56 காலை 10 மணிக்கு, சென்னை-1, எண் 17, சாலைபிள்ளையார் கோயில் தெரு, முத்தமிழ் மன்றப் பணிமனையில், தோழர் மூ. பெருமான் தலைமையில், 'கொள்கை' என்ற தலைப்பில் மன்றத் தோழர்களும் மற்றும் பலரும் பேசுவர்.

முன்னணி கழகக் கூட்டம்

12—8—56 மாலை 5-30 மணிக்கு, சென்னை—திருவல்லிக்கேணி, எண் 9, சுப்பராய செட்டித் தெருவில் திரு. எம். குப்புசாமி தலைமையில், திரு. எஸ். ஆர். சங்கரலிங்கம் அவர்கள், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்' என்ற தலைப்பில் பேசுவார்.

சென்னை நகரச் சிறுவர் சங்கம்

12—8—56 மாலை 4 மணிக்கு திரு. பி பாலகோபால் தலைமையில், 'குழந்தைகளுக்குக் கதை சொல்லும் நிகழ்ச்சி,' சென்னை—கலியாணமேஸ்திரி தோட்டத்தில் நடைபெறும். திரு. பி. தேவசுந்தரம் அவர்கள் குழந்தைகளுக்குக் கதை சொல்லுவார்.

சென்னைக் கல்விச் சங்கம்

12—8—56 மாலை 5 மணிக்கு, பட்டாளம் ஸ்ட்ரான்ஸ் ரோடு, ஆண் பள்ளியில், 'பழமையும் பண்பாடும்' என்னும் தலைப்பில், திரு. த. வே. முருகேசனார் தலைமையில் திருவாளர்கள் வ சுப்பிரமணியம், ந. வீ. வரதன் ஆகியோர் பேசுவர்.

சென்னை — வண்ணையம்பதி தமிழ் இளைஞர் கழகம்

12—8—56 காலை 10 மணிக்கு, தனலட்சுமி உயர்தர ஆரம்பப் பள்ளியில், மேற்படி மன்றச் சார்பில், திரு. எஸ். சதாசிவம் அவர்கள், திருக்குறளில் 'அன்புடைமை' என்ற அதிகாரத்தை விளக்கிப் பேசுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, நூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.